# சமூக விஞ்ஞான கற்கை வட்டம்





20-12-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : தமிழரிடையே காணப்படும் சாதியச் சிந்தனை**

**தொடக்கவுரையாடல் : தி. அனோஜன்**

சாதியம் என்பது அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்தி ஒடுக்கும் செயற்பாடுகளுக்கான ஒரு கருத்தியல். ஏற்றதாழ்வான சமூக அமைப்பில் சுரண்டுவோர்க்கு உரியதாக உள்ள அதிகாரத்தைப் பேணும்பொருட்டு வடிவமைக்கப்பட்டதே சாதியம்.

சாதிய சமூகம் ஆரம்ப காலத்திலிருந்து காணப்பட்டாலும் சாதி ஏற்றதாழ்வுகள் பின்னாளிலேயே தோன்றின. குறித்த பிரதேசத்தில் அதிகாரத்தைப் பெற்ற ஒரு சாதிக் குழு அதிகாரத்தினால் மற்றய சாதிக் குழுக்களை தாழ்வு படுத்திருக்க வேண்டும். பின்னாளில் அவற்றை நியாயப் படுத்தலுக்காகவேண்டி தமக்கு ஏற்றதாக சாஸ்திரங்களையும் அமைத்துக் கொண்டிருக்கவேண்டும்.

இலங்கையின் சமூகக் கட்டமைப்பைப் பொருத்தவரையில் தமிழர் சிங்களவர் என பொரும்பாண்மையாக எல்லாச் சமூகத்திடமும் சாதி அடிப்படைக் கட்டுமானமாகவே ஆரம்பம் தொட்டு இருந்துள்ளது. இதில் இந்தியாவின் பண்பாட்டுச் செல்வாக்கு முக்கியமானது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்பட்ட நீண்ட பண்பாட்டுத் தொடர்பானது இலங்கை முழுவதிலும் பல புதிய பழக்கவழக்கங்களையும் சடங்குகளையும் சமூக அமைப்புமுறைகளையும் வேறுன்ற வழி செய்தது. ஆனாலும் இந்தியாவின் தற்போதய நிலையுடன் பார்க்கையில் இலங்கையில் பாடசாலைக் கல்வி, வேலைவாய்ப்பு ஒதுக்கீடு, பாராளுமன்ற ஆசன ஒதுக்கீடு போன்ற வற்றுக்கு சாதி சார்பான இட ஒதுக்கீடுகள் கிடையாது. திருமணச் சட்டங்களிலும் சாதி இடம்பெறவில்லை. எனினும் இலங்கையில் வாழ்கின்ற தமிழர், சிங்களவர் ஆகிய தேசிய இனங்கள் இன்றும் வலுவான சாதிப் படிநிலை அமைப்பை தம்மகத்தே கொண்டிருக்கின்றன.

இந்தத் தாக்கம் தமிழரிடத்து மட்டுமல்லாது சிங்களவரிடத்தும் காணப்பட்ட போதும் அதன் உக்கிரம் என்னவோ தமிழ்ச் சமுதாயத்திடம்தான் அதிகமாக வெளிப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழ் சமூகமானது பலவகையிலும் ஒடுக்கப்பட்டு, வன்முறைக்குட் படுத்தப்பட்டு ஒரு இரண்டாம் தர சமூகமாகவே நடத்தப்பட்டு வருகிறது. இப்படி இருக்கையில் தமிழரிகளில் ஒருபகுதியினர் இன்னொரு பகுதித் தமிழர்கள்மீது சாதியின் பெயரால் ஒடுக்குமுறையை பயன்படுத்துகிறது. இது மிகவும் கவலைக்குரிய நிலையாகும்.

> 1970 களில் நடைபெற்றது போன்ற போராட்டங்கள் இப்போது பயன்படுத்த முடியாது. ஏனெனில் இப்போது தீண்டாமைக் கொடுமைகள் இல்லாதொழிக்கப் பட்டுவிட்டன. மக்கள் அடிமனதில் மட்டும் சாதிய வேற்றுமை காணப்படுகிறது. இப்படியான நிலையில் சாதியத்திற்கெதிரான புதிய போராட்டம் இளம்தலைமுறைகளை விழிப்புணர்வு அடையச் செய்வதாகவே இருக்கவேண்டும் அத்துடன் பழைய போராட்டங்கள் பற்றிய வரலாறும் இளைய தலைமுறைக்குக் கற்றுத்தரப் படவேண்டும்.

தமிழ்ச் சமூகத்திடையே காணப்பட்ட அகமணமுறையானது சாதிய அமைப்பின் வலிமையைத் தாங்கும் ஒரு தூணாகவே இருந்துள்ளது. அகமண முறைமூலம் குறித்த ஒரு சாதி மேலும் வலுப்பொறுகிறது. இன்றும் கூட அகமண முறை நிழவிவந்தாலும் ஒப்பிட்டளவில் மிகவும் குறைந்துவிட்டது. இதனை விட மதமானது சாதியை வலிமைப் படுத்தும் ஒரு மிகப்பெரும் காரணியாயுள்ளது. சாதிய அமைப்பையும் அதன் ஏற்றதாழ்வுகளையும் மதம் காலங்காலமாக அங்கீகரித்து வந்துள்ளது.

தமிழரிடயே சாதியச் சிந்தனை இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறதா என்று அடிக்கடி கேள்வியெழுவதுண்டு. இதற்கு பதில் தேடும்போது இதனை இரு வேறு தளத்தில் ஆராயவேண்டிய கடப்பாடு தோன்றுகிறது.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

சமூக விஞ்ஞான கற்கை வட்டம் 2013

திறந்த கலந்துரையாடல் | 03-01-2013



கீர்த்தி சிறீ ராஜசிங்கன்

**கீர்த்தி சிறீ ராஜசிங்கன் (பிறப்பு : 1734. இறப்பு : ஜனவரி 2, 1782).**

இலங்கையின் இறுதி மன்னரான இவர் கண்டி இராச்சியத்தினை 35 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளார். இவர் தென்னிந்தியாவின் மதுரை நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவராவார். இவரது இயற்பெயர் கந்தசாமி ஆகும். கண்டி ரஜமகா விகாரை, தலதா மாளிகையின் உட்புற ஆலயம் போன்றவற்றைக் கட்டுவித்த இவர் சிலாபம் முன்னேசுவரம் கோவிலையும் மீளக் கட்டுவித்துள்ளார்.

ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களைத் தொடர்ச்சியாக எதிர்த்துவந்த ராஜசிங்கன், ஒல்லாந்தரின் கரையோர நிலைகளுக்கெதிரான வெற்றிகரமான பல இராணுவத் தாக்குதல்களை வழிநடத்தியுள்ளார்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772260165
0752151580

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

### தமிழரிடையே காணப்படும் சாதியச் சிந்தனை

முன்பக்கத் தொடர்ச்சி..

ஒன்று கருத்தியல் தளம், மக்களின் மனநிலையுடன் தொடர்புபட்டதாக இது அமைகிறது. மற்றையது பொருளாதாரத் தளம், ஒரு சமூகத்திடையே நிலவும் உற்பத்திமுறை பொருளாதாரக் காரணிகளால் செல்வாக்குப் பெறும் ஒரு தளமாக இது இருக்கிறது.

அந்த வகையில் சாதியம் கருத்தியல் தளத்தில் இன்னமும் வேரூன்றியுள்ளது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும். ஆனால் பொருளாதார தளத்தில் முதலாளித்துவ வளர்ச்சி சாதியின் சில அடிப்படைக் கூறுகளைத் தகர்ந்துவிட்டது. ஆனால் சாதியம் தனது பொருளாதார அடிப்படையைக் முற்றிலுமாக இழந்துவிடவில்லை.

பெரும்பாண்மையான தாழ்த்தப்பட்ட சாதியினர் பொருளாதார அடிப்படையில் இன்னமும் கீழ்நிலையிலேயே உள்ளனர். சாதிய படிநிலை அமைப்பில் உச்சத்தில் இருக்கும் ஒரு சாதி, வர்க்க நிலையில் ஆளும்வர்க்க நிலையாக மாறியிருப்பது போன்று மிக அடிமட்டத்தில் இருக்கும் ஒரு சாதி வர்க்க நிலையில் உழைக்கின்ற மக்களாக இருந்து வருகின்ற நிலை தொடர்கிறது. இடைப்பட்ட சாதிகளில் சிலவற்றில் ஒரு சிறு பிரிவினர் ஆளும்வர்க்க நிலையை எய்தியுள்ள போதிலும் பெரும்பாண்மையினர் பொருளாதார நிலையிலேயோ அல்லது அரசியல் துறையிலேயோ பெரிய மாற்றங்களை எதையும் அடைந்தவர்களாக இல்லை என்பதே உண்மை. உண்மையில் முதலாளித்துவம் சாதிய வித்தியாசத்தை வர்க்க வித்தியாசமாக மாற்றியிருக்கிறது.

நிலபிரபுத்துவத்தில் இருந்தது போலல்லாமல், முதலாளித்துவ வளர்ச்சியில், சாதியக் கட்டமைப்பில் சில நெகிழ்வு தன்மைகள் உருவாக்க முடிந்தது என்பது உண்மைதான். ஆனால் சாதியத்தின் அடிப்படையை அதனால் தகர்த்தெரிய முடியவில்லை. முடியவிலை என்பதைவிட முதலாளித்துவத்திற்கு சாதியக் கட்டமைப்பைத் தகர்த்தெறிவது எவ்வித இலாபமும் இல்லை.

முதலாளித்துவ வளர்ச்சிக்கு சாதியக்கட்டமைப்பானது ஏதுவாக கூறுகளைக் தன்னகத்தே கொண்டிருந்திருக்கிறது. இந்தியா போன்று பெரும்பானமையான மக்களை தாழ்த்தப்பட்ட சாதியாகக் கருதக்கூடிய ஒரு நாட்டில் சாதிய அமைப்பில் கீழ்நிலையில் இருக்கும் அதிக எண்ணிக்கையான மக்களை கூலி உழைப்பாளிகளாக இலகுவில் பெறக்கூடியமை முதலாளித்துவத்தைப் பொருத்தவகையில் பாரிய சாதகமான அம்சமாகும்.

தனது அன்றாட வாழ்க்கைப் பிழைப்புக்காக ஒரு கூலித்தொழிலாளியாக ஈடுபடுத்தப்படும் தாழ்த்தப்பட்ட தொழிலாளி, முதலாளித்துவ வளர்ச்சியில் கூலி உழைப்பு என்ற ஒன்றுடன் மட்டுமே இணைக்கப்படும் போதிலும் அவரால் ஏற்கனவே பிணைக்கப்பட்ட சாதியத்தின் விலங்கிலிருந்து மீளமுடியாத நிலையே உள்ளது.

என்னதான் உற்பத்திமுறை மாறினாலும் சாதியச் சிந்தனை தூக்கியெறிந்துவிடப்படவில்லை. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தை எடுத்து நோக்கின், இலங்கையில் இருந்த சமூக உற்பத்திமுறை புலம்பெயர் தேசங்களில் இல்லாதபோதும் அவர்களிடையே சாதியச் சிந்தனை தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

சாதியத்தைப் பொருத்தவரை பொருளாதார தளத்தைத் தாண்டியும் கருத்தியல்த் தள்மானது மிகவும் செல்வாக்கு மிக்கதாகவேயுள்ளது. சாதியமானது சாதாரணமாக பொருளாதார நிலைமைகளோடு ஒருவகையான உறவை கொண்டிக்கும் போதிலும் அதையும் தாண்டி சமூகக் கட்டமைப்பு பற்றி காலகாலமாக இருந்துவந்த கோட்பாடுகளும் சிந்தனைகளும் விஞ்சி நிற்பது தெரியும்.

சாதியத்தின் அத்திவாரமாக பொருளாதாரத் தளத்தையும் மேற்கட்டுமானமாக கருத்தியல்த் தளமும் ஆரம்பகாலத்தில் பார்க்கப்பட்டது. பின்னாளில் சாத்தியத்தின் அத்திவாரமாக கருத்தியல்த் தளம் மாறியிருக்கிறது. அதனாலத்தான் பொருளாதார அமைப்பும் உற்பத்தி முறைமையும் மாறிய போதிலும் சாதியத்தால் நின்று நிலைக்கக் கூடியதாயுள்ளது.

இப்போது நமது சமூகத்திடையே அகமணமுறையானது ஏறக்குறைய குறைந்துள்ளமையும் சாதியத்தின் வீரியத்தைக் குறைத்துள்ளது. ஆனாலும் திருமணம் என்ற பேச்சு எழும்போது சாதி பார்க்கும் முறை இன்னமும் மாறிவிடவில்லை. திருமணத்திற்கு சாதியைக் குறிப்பிட்டு மணமகன், மணமகள் தேடும் விளம்பரங்களுக்கு எமது சமூகத்தில் இன்றைவரைக்கும் குறைவேதுமில்லை. தாங்கள் சாதாரண வாழ்வில் மற்றவர்களிடையே சாதி வேறுபாடு காட்டுவதில்லை என சொல்லும் பலரும் திருமணத்திற்கு மட்டும் சாதி பார்க்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளமை கண்கூடு.

எமது சமூகத்திற்குள் இருக்கும் இத்தகைய சாதிய சிந்தனை, முரண்பாடுகள் என்பன சமூக இயக்கத்தைத் தடுப்பதோடு சமூகத்தின் வளர்ச்சிக்கு முட்டுகட்டை போடவும் செய்கிறது. சமூகத்தை வேகமாக இயக்க முடியாத வண்ணம் கட்டிப்போட்டு வைக்கிறது.

சாதிய முரண்பாடு என்பது இன்று வரை தமிழர் சமூக அமைப்பின் வெவ்வேறு வகையில் இடம் பெற்று வருகின்றது. அத்தகைய முரண்பாடுகளை இல்லாதாக்கி ஒரு சமத்துவமான சமூகத்தை உருவாக்க வேண்டியது காலத்தின் தேவை. இதற்கான வேலைத்திட்டங்கள் நடத்தப்படவேண்டும்.

இங்கு ஒரு முக்கியமான சவால் எழுகிறது. அதாவது 1970 களில் நடைபெற்றது போன்ற போராட்டங்கள் இப்போது பயன்படுத்த முடியாது. ஏனெனில் இப்போது தீண்டாமைக் கொடுமைகள் இல்லாதொழிக்கப் பட்டுவிட்டன. மக்கள் அடிமனதில் மட்டும் சாதிய வேற்றுமை காணப்படுகிறது. இது சந்ததிக்கு சந்ததி கற்பிக்கப்பட்டே வருகிறது. இப்படியான நிலையில் சாதியத்திற்கெதிரான புதிய போராட்டம் இளம்தலைமுறைகளை விழிப்புணர்வு அடையச் செய்வதாகவே இருக்கவேண்டும் அத்துடன் பழைய போராட்டங்கள் பற்றிய வரலாறும் இளைய தலைமுறைக்குக் கற்றுத்தரப் படவேண்டும்.

'சாதிய அமைப்பு தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற அடிப்படையில் புதிய சமூக மாற்றத்துக்கான போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுத்து செல்லப்பட வேண்டியது அவசியமாகிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம் 2013**
**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)**

* சென்ற ஆண்டுக்கான திட்டங்கள் தொடர்பான மீள்பார்வை

* சென்ற ஆண்டில் எதிர்கொண்ட சவால்கள் தொடர்பான உரையாடல்

* இவ்வாண்டுக்கான அடிப்படை நிகழ்ச்சித் திட்டங்களும் எதிர்பார்ப்புக்களும்.

* ஒதுக்கப்படவேண்டிய வளங்கள் தொடர்பான உரையாடல்

* புதிய திட்டங்களுக்கான பொறுப்புக்கள் பகிர்ந்தளித்தல்



சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
cc BY NC SA